# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என். ஜி. எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# பொருளடக்கம்

1. தமிழ் இலக்கியங்களில் இறை இயல் காட்டும் படிநிலை வளர்ச்சிகள்
முனைவர் அமுதன் 1

2. திருமுறைகளில் திருக்குறள்
N.S. அசோக்குமார் 7

3. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் அறம்
பா. அந்தோனியம்மாள் 15

4. பரிபாடலில் திருமால் வழிபாடு
முனைவர் ப. அருள்ஜோதி 19

5. தமிழ் இலக்கியத்தில் இறைநெறி
அனிதா 26

6. இசுலாமியத் தமிழிலக்கியம் காட்டும் இறைநெறிகள்
முனைவர் இரா. ஆரோக்கியமேரி 32

7. தமிழ்ச் சித்தர் இறைநெறி
முனைவர் வெ. இராம்ராஜ் 38

8. திருக்குறளில் இறைமை நெறி
பேரா. முனைவர் இலலிதாசுந்தரம் 46

9. திருமுருகாற்றுப்படையும் தெய்வம் போற்றும் மரபும்
முனைவர் வே. கண்ணதாசன் 53

10. சர்வமும் இறைமயம்
பேரா. பா. கலைச்செல்வி 61

11. நிலம் சார்ந்த இறைநெறி
ம. காயத்ரி 64

12. ஔவையின் பார்வையில் இறைவன்
முனைவர் உ. கிருஷ்ணன் 70

13. சைவசமயமும் இறைநெறியும்
முனைவர் த. கீதாஞ்சலி 77

14. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு
முனைவர் ச. குருஞானாம்பிகா 83

15. ஆதிரையான் – ஆடவல்லான் வழிபாட்டு வளர்ச்சி நிலை
ர.கோவர்தனன் 88

16. திருவள்ளுவர் வரையறுத்த இறைநெறிக் கோட்பாடு 97
திருக்குறள் தூதர் ம. சக்கரவர்த்தி

17. கண்ணதாசன் கவிதைகளில் இறைநெறிகள் 106
இரா. சங்கரேஸ்வரி

18. நால்வரின் பக்தி நெறிகள் 112
ப. சவிதா

19. அவ்வை குறட்பாக்களில் சைவ சித்தாந்த நெறி 119
முனைவர் சே. சாந்தி

20. இலக்கியங்களில் இறைநெறியின் நோக்கும் போக்கும் 125
முனைவர் ம. சித்ரகலா

21. நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும் 135
A. சிவபாக்யம்

22. பகுத்தறிவு – வழிபாட்டு நெறி 142
முனைவர் மு. சுகந்தி

23. அனுராதாரமணன் நாவல்களில் இறைநெறிகள் 148
கி. சுந்தரம்

24. பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமைப் பெண்கள் 153
பேரா. ர. சூர்யா

25. மனித மனமும் இறையும் 158
முனைவர் ந. ஜெயசுதா

26. குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி 162
முனைவர் இரா. ஜெயந்தி

27. சங்க இலக்கியத்தில் செவ்வேள் 168
முனைவர் ஜமுனாசெல்வராஜ்

28. தொல்காப்பியத்தில் இறைநெறி 173
மு. செல்வகுமார்

29. செவ்விலக்கியத்தில் மாயோன் வழிபாடு 182
முனைவர் ம. தமிழ்வாணன்

30. ஆழ்வார் பாசுரங்களில் – அகநெறி 193
ந. திருமால்

31. நீலகிரி தொரையரின் கோவில் அமைப்பு முறை 196
ம. தீபா

32. இறைநெறியில் முருக தத்துவம் 202
முனைவர் கி. துர்காதேவி

33. திருமுருகாற்றுப்படையில் இறைநெறி
முனைவர் யு. துர்காதேவி 209

34. இருக்க இயலாத இறைநெறிகள்
Dr. K.I.N. DEIVA AKANDAN ARAMAN 215

35. அறநெறியின் இறைநெறிகள்
திருக்குறள் தூதர் சு. நடராசன் 222

36. திருக்குறள் உணர்த்தும் இறையியல் கோட்பாடு
முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி 227

37. குறிஞ்சி நிலத் தெய்வம்
த. நர்மதா தேவி 235

38. நாகூர் ரூமியின் சிறுகதைகளின் வழி காணப்படும் இசுலாமியக் கருத்துகள்
கா. நஸ்ரீன் பாத்திமா 240

39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு
அ. நித்யா 245

40. இராமனின் இறைநெறிக்கொள்கை
முனைவர் வெ. நிர்மலா 250

41. சமணம் சுட்டும் இறைநெறி
முனைவர் ஜெ. நீலாக்சி 258

42. பாரதியாரின் இறைநெறி
முனைவர் எ. பச்சையப்பன் 262

43. திருப்பாவையில் இறைநெறி
வீ. பவானி 271

44. இறைநெறியில் புதுக்கவிதை – ஓர் ஆய்வு
முனைவர் கோ.வ. பரத்வாஜ் 278

45. திருமுருகாற்றுப்படை – சுவையும் சொல்லாக்கமும்
முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் 283

46. வைணவ இலக்கியத்தில் ஆண்டாளின் இறைநெறி
முனைவர் ச. பாக்கியலஷ்மி 299

47. திருமூலர் கூறும் துறவு மார்க்கம்
முனைவர் ஜீ. பாண்டியலட்சுமி 305

48. பரிபாடலில் திருமால் செவ்வேள் வழிபாடு – ஓர் ஒப்பீடு
இரா. பிரகாஷ் 312

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள் — 320
முனைவர் ம. பிரகாஷ்

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு — 326
ப. பிரதாப்

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி — 333
ப. பிரியா

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள் — 338
பா. பூங்காவனம்

53. விவிலியம் காட்டும் இறைநெறி — 343
சு. பெர்சியா ஜீவபாய்

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி — 348
முனைவர் பி. மஞ்சுளா

55. சமயங்கள் வளர்த்த தமிழ் — 353
அ. மகபூபூ

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி — 364
முனைவர் ச. மதுரா

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும் — 369
முனைவர் த. மலையரசி

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும் — 374
முனைவர் மு.தேவராஜ்

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம் — 383
பேராசிரியர் ப. மகாலிங்கம்

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி — 389
முனைவர் பே. மகேஸ்வரி

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி — 395
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள்

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை — 402
முனைவர் முகில்லை இராசபாண்டியன்

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள் — 407
அ. முத்துகிருஷ்ணன்

64. கம்பனில் வைணவ நெறி — 411
முனைவர் சி. முத்துமாலை

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள் — 419
க. முருகேசன்

66. திருவள்ளுவர் வரையறுத்த மனிதத் தெய்வக் கோட்பாடுகள்
முனைவர் கு. மோகனராசு 425
67. நாட்டுப்புற பாடல்களில் இறைவழிபாடு
முனைவர் ராதிகா மேகநாதன் 431
68. புரட்சித்துறவி வள்ளலாரின் இறைநெறி
முனைவர் த. ராஜீவ்காந்தி 437
69. இலக்கியங்களில் நடுகல் வழிபாட்டுமுறைகளும், தற்கால வழிபாட்டுமுறைகளும்
முனைவர் வே. வளர்மதி 442
70. சங்க இலக்கியத்தில் திருமால்
வி. வாசுதேவன் 448
71. பன்னிரு ஆழ்வார்களின் பக்திநெறி
து. விசாலாட்சி 456
72. சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு
ரா. ராஜா 466
73. FACTS OF INCOME INEQUALITY IN INDIA
SHAHUL HAMEED, NGOZI ADELEYE, M. ABDUL JAMAL 473

# 71. பன்னிரு ஆழ்வார்களின் பக்திநெறி

து. விசாலாட்சி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

திருமாலை வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு வருபவர்கள் அந்தணர்கள். அதிலும் திருமலை உயிராகவும், உடலாகவும், காதலனாகவும், குழந்தையாகவும், தோழனாகவும் எண்ணி, தங்களது ஒவ்வொரு செயலிலும் திருமாலின் திருநாமம் ஒலிக்கப்பட வேண்டும் என்று, அழங்கால்பட்டு இறைவனை வழிபட்டவர்கள் 'ஆழ்வார்கள்' எனப்படுபவர்கள்.

இவர்களால் திருமாலின் மேல் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தையும், பாசுரங்கள் என்றும், அது இறைவனை மட்டுமே போற்றிப்பாடுவதனால் வைணவ மரபில் மங்களாசாசனம் என்றும், வழங்கப்படுகிறது. அப்படி ஆழ்வார்கள் பாடிய பாடல்களை தொகுத்து நமக்கு 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்கியவர் நாதமுனிகள். இவற்றிற்கு 'திராவிட சாசரம்' என்ற பெயரும் உண்டு.

## இறைவன் வழிபாடு

இறைவனை ஒவ்வொருவரும் தங்களது வசதிற்கு ஏற்றாற்போல வழிபட்டார்கள். இந்த முறையில் தான் இறைவனைத் தொழ வேண்டும் என்று எந்தவொரு நிர்பந்தமும் இல்லாமல் இருந்தது. ஆரம்பகாலத்தில் மனிதன் இயற்கையை இறைவனாக எண்ணி வழிபட்டான். பெரும்பாலான சித்தர்கள் இதனையே பின்பற்றினர் எனலாம். ஆனால் இறைவனை பல பாசுரங்கள் பாடி அதில் இறைவனை மயங்கச் செய்த பெருமை ஆழ்வார்களைச் சாரும். அத்தகைய ஆழ்வார்கள் பக்தியினை இங்கு காண்போம்.

## ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் என்றால் இறைவனின் பக்தியில் 'ஆழங்கால் பட்டவர்கள்' என்று பொருள்படும். இறைவனின் கல்யாண குணங்களில் ஆழ்ந்தவர்கள் அல்லது இறைவனின் திருவடியினால் ஆழப்பட்டவர்கள் எனலாம். இப்படியாக இறைவனின் எல்லா குணங்களையும் தெரிந்து கொண்டு, 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது', 'இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்' என்று எண்ணியபடியே தங்கள் வாழ்நாளை இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள். இன்றும் அவர்கள் பாடிய பாசுரங்கள் வைணவத் திருக்கோவில்களில் பாடப்பட்டும் பலரால் பாராயணம் செய்யப்பட்டும் வருகிறது. இத்தகைய பெருமைக்கு உரியவர்கள். உலகம் அழியும்வரை வாழ்பவர்கள் ஆழ்வார்கள்.

## ஆழ்வார்களின் அவதாரமுறை

ஆழ்வார்களின் அவதாரக் காலமாக துவாபரயுகம் முடிவும், கலியுகத் தொடக்கம் வரையாகும் என்று 'குருபரம்பறையும்', 'திவ்வியசூரிசரிதமும்' கூறுகிறது. அதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

**பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ் மழிசை**
**அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யப்பட்ட**
**நாதன்அன் பர்தாள் தூளி நற்பாணன் ஏற்கலியன்**
**ஈதிவர் தோற்றத் தடைவாம் இங்கு**

எனும் பாடல் விளக்குகிறது எனலாம்.

திருமாலின் ஐம்படைத் தாலிகளாக எண்ணப்படுபவை

1. சக்கரம் - சுதர்சனம்
2. வில் - சாரங்கம்
3. வாள் - நந்தகம்
4. தண்டு - கௌமேதகி
5. சங்கு - பாஞ்சசன்னியம்

இதில் ஆழ்வார்கள் ஒவ்வொருவரும் திருமாலின் அம்சமாக விளங்குவதாக உள்ளது எனலாம்.

## பன்னிரு ஆழ்வார்களில் முதல் மூன்று ஆழ்வார்களின் சிறப்பு

பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுகின்றனர். இவர்கள் மூவரும் சுத்த சத்துவ குணத்தினர். இவர்கள் ஒருவரையொருவர் அறியாமல் அங்கும், இங்கும் ஓடித்திரிந்து பின் 'திருக்கோவிலூரில்' உள்ள ஓர் இல்லத்தில் பொய்கையாழ்வார் இடைக்கழியில் துயில அப்போது அங்கு வந்த பூதத்தாழ்வார் தனக்கு இடம் கேட்க பொய்கையாழ்வார், ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம் என்று கூறி இடம் தர இருவரும் இருந்தனர். அச்சமயம் அங்கு வந்த பேயாழ்வார், இடம் தேட இருவரும் ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். ஒருவர் நிற்கலாம் என்று கூறி நிற்க, அப்போது அவர்களுடன் திருமாலும் நால்வராக நின்று நெருக்க, அங்கு மூவரும் இறைவனை உணர்ந்தனர்.

### பொய்கையாழ்வார்

காஞ்சிபுரத்தில் தாமரைப் பொய்கையில் தோன்றியவர். இவர் திருமாலின் சங்காகிய 'பாஞ்சசன்னியத்தின்' அவதாரமாக உதித்தவர். முதன்முறையாக திருமாலின் 'பத்து அவதாரங்களை' பாடிய பெருமை இவரையே சாரும். திருக்கோவிலூரில் இறைவனை பொய்கையார் உணர்ந்த போது பாடிய பாசுரம்,

**வையந் தகளியா வார்க்கடலே நெய்யாக**
**வெய்யக்கதிரோன் விளக்காக - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை**
**இடராழி நீங்குகவே என்று**

என்றப் பாசுரந்தைப் பாடியுள்ளார்.

### பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் எனப்படும் திருக்கடல் மல்லையில் குருக்கத்தி (மாதவி) மலரில் தோன்றியவர். இவர் கதாயுதத்தின் அவதாரமாகும். 'பூதம்' என்னும் சொல்லை பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதால் இவருக்கு இப்பெயர் பெற்றது எனலாம். திருக்கோவலூரில் இறைவனை பூதத்தாழ்வார் உணர்ந்தபோது பாடிய பாசுரம்,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

...ற பாசுரத்தைப் பாடியுள்ளார்.

பேயாழ்வார்

சென்னை மயிலாப்பூரில் செவ்வல்லிப் பூவில் பிறந்தவர். ...ல் திருமாலின் 'நந்தகம்' என்னும் 'வாளின்' அம்சமாகும். ...தி பரவசத்தினால் துள்ளிக்குதித்தப்படி இருந்தமையால் ...ல் பேயாழ்வார் எனப்பட்டார். திருக்கோவலூரில் இறைவனை பேயாழ்வார் உணர்ந்து போது பாடிய பாசுரம்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என் ஆழி வண்ணன்பால் இன்று

என்ற பாசுரம் பாடியுள்ளார். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் 'முதலாழ்வார்கள்' எனப்படுகின்றனர்.

## திருமழிசை ஆழ்வார்

தொண்டை நாட்டு திருமழிசையில் தை - மக நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்து பெற்றோர் இல்லாமையால் திருவாளன் எனும் தாழ்ந்த குலத்தவன் மனையில் வளர்ந்தவர். இவருக்கு 'சக்கரத்தாழ்வார்', 'பக்திசாரார்' என்று வேறு பல பெயர்களும் உண்டு. சைவம் முதலிய பலசமயங்களுக்குச் சென்று இறுதியில் வைணவத்திற்கு வந்தார். மூதாட்டியின் முதுமை நீக்கி இளமை எய்தச் செய்தார். இவர் சீடரான கணிக்கண்ணனை மன்னன் தன்னைப் பாடுமாறு பணிக்க 'நாராயணனைப் பாடிய வாயால் மானிடனைப் பாடேன்' என்று கூற அதுகேட்டு மன்னன் வெகுண்டு நாட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிட்டார். இதனால், சீடர் இதனை குருவிடம் கூற நீயே செல்லும் போது எனக்கும், பெருமாளுக்கும் என்ன வேலை என்று திருமாலை கிளம்பச் செய்தார். அப்போது அவர் பாடிய பாசுரம்.

கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா - துணிவுடையே

> செந்நாப் புலவன் யான் செல்கின்றேன் நீயும் உன்றன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்

என்ற பாடலைப் பாடியுள்ளார். திருமாலின் மேல் இவர்கொண்டிருந்த பக்தியின் காரணமாக தன் சொல்லைக் கேட்க வைத்தார். இதனைப் பற்றி 'பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்று பாராட்டியுள்ளார் குமரகுருபரர்.

## பெரியாழ்வார்

விஷ்ணுசித்தர் என்னும் இயற்பெயருடையவர் பெரியாழ்வார். இவரை ஸ்ரீவில்லிப்புத்தூர், பட்டர்பிரான் எனவும் அழைக்கப்படுவார். மதுரை மன்னன் 'வல்லபதேவன்' கட்டிய பொற்கிழியை பெருமாளின் வேண்டுகோளுக்கிணங்கி அதனை அறுத்தார். இதனால் 'கிழி அறுத்த ஆழ்வார்' என அழைக்கப்படுவார். 'சைவத்தில்' இறைவறுக்குப் பல்லாண்டு பாடியவர் 'சேந்தனார்' என்றால் வைணவத்தில் பல்லாண்டு பாடியவர் பெரியாழ்வார் ஆவார். திருமாலின் மேல் கொண்ட பக்தியின் காரணமாக திருமாலை குழந்தையாக எண்ணி பிள்ளைத் தமிழ் பாடியவர். இதனால் இவர் பிள்ளைத்தமிழ் முன்னோடி என்று அழைக்கப்படுகிறார். அம்புலிப் பருவத்தில் சாம, தான, பேத, தண்டம் என்ற அமைப்பில் பாடும் முறையை முதன்முதலில் தோற்றுவித்தவர் பெரியாழ்வார். பெரியாழ்வார் தன்னை யசோதையாக பாவித்து பாடிய பாசுரம்

> *மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி*
> **ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
> **பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**
> **மாணிக் குறளனே தாலேலோ**
> *வையம் அளந்தானே தாலேலோ*

என்று தாலாட்டுப் பாடியுள்ளார்.

## ஆண்டாள்

பன்னிரு ஆழ்வார்களுள் பெண்பாலர் இவர் ஒருவர் மட்டுமே. பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளசிச் செடிகளுக்கு இடையே கிடைக்கப் பெற்றவர் ஆண்டாள். வைணவர்கள் இவரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த 'பைங்கொடி' என்றேத்துவர். இவருக்கு கோதை என்றப் பெயரும் உண்டு.

நாளும் பெருமாளுக்கு கட்டிய மாலையைத் தந்தைக்குத் தெரியாது சூடி மகிழ்ந்து பின் கழற்றிவிடுவார். ஒரு நாள் அம் மாலை தொடுத்து பெருமாளுக்கு சாத்த அதனை மறுத்த பெருமாள் ஆண்டாள் சூடிய மாலை தான் வேண்டும் என்று கனவில் கூற அங்ஙனமே கோதை சூடிய மாலையையும் கோதையையும் இறைவனுக்குக் கொடுத்தார் பெரியாழ்வார். ஆண்டவனையே ஆண்டமையால் ஆண்டாள் என்றும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் அழைக்கப்படலானார். ஆழ்வார்களில் தனிச்சிறப்பிற்குரியவர். இவர் பாடிய திருப்பாவை பாடல்கள் பாவை நோன்பு பற்றியது. மார்கழி திங்களில் அதிகாலைப் பொழுதில் வைணவர்களால் பாராயணம் செய்யப்படும். இது மிகவும் சிறப்புமிக்கது.

மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே

என்று திருமாலின் மேலுள்ள தன் தீராக்காதலை வெளிப்படுத்துகிறார்.

வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று, எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்

என்று பாடிய பாசுரத்தில் இருந்து இவர் இறைவன் மேல் கொண்டுள்ள பத்தியானது தலைவன் - தலைவி மார்க்கமாகவே உள்ளது எனலாம்.

குலசேகராழ்வார்

ஊர் சேரநாட்டு திருவஞ்சைக்களம், திருடவரதன் என்னும் மன்னனின் மகனாவார். இவர் தம் பாடல்களில் தன்னைச் சோல்லிக்காவலன், கூடல்நாயகன், கோழிக்கோன் எனக் கூறிக் கொள்கிறார். திருமால் மீது கொண்ட பக்தியால் அரச வாழ்வைத் துறந்தவர். திருமால் இருக்கும் திருவேங்கட மலையில் தான் பறவையாய், மீனாய், ஆறாய், கொடிமரமாய், படியாய்ப் பிறக்கும் பேறு கிடைக்க வேண்டுமென்று கூறுவதன் மூலம் இவர் திருமால் மேல் கொண்டுள்ள அளவு கடந்த பக்தியினைக் காணலாம்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்

அடியரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளமாய் காண்பேனே

என்ற பாசுரத்தின் மூலம் அறியலாம். ஒரு முறை இராமாயணச் சொற்பொழிவில் தன்னைச் சூழ்ந்து கொண்ட கர, தூடணர்களுடன் இராமன் தனித்துப் போரிட்டான் என்பதனைக் கேட்டு இராமனுக்குப் படை உதவி புரிய தன் படைகளை தயார் செய்யப் புறப்பட்டார் உடனே சொற்பொழிவாற்றிய புராணிகன் இராமன் சாதுரியமாய் வென்றான் என்றவுடன் தனது எண்ணத்தைக் கைவிட்டார். இவர் வடமொழியில் முகுந்த மாலையும் கண்ணனின் பிள்ளைமை இன்பங்கள் அனைத்தும் யசோதை பெற்றாளே எனத் தேவகி புலம்புவதாக கற்பனை செய்து தேவகி புலம்பல் என்ற செய்யுள் பகுதியைப் பாடியுள்ளார்.

## தொண்டரடிப் பெரியாழ்வார்

விப்ர நாராயணனார் என்னும் இயற்பெயர் கொண்டவர். இவர் திருவரங்கத்தில் இறைவனுக்கு மலர் சாத்துப் பொறுப்பினைப் பெற்றிருந்தார். அச்சமயம், □தேவதேவி□ என்னும் விலைமாதின் வலையில் சிக்கி இறைவனை மறந்து சிறைத் தண்டனைக்கு ஆளானார். பின் இறைவனாலேயே மீட்கப்பட்டார். தான் செய்த நீங்க திருமால் தொண்டர்களின் பாதத்துளிகளினை உட்கொண்டு மன்னிப்பு கேட்டார். இதனால் ‘தொண்டர்அடிப்பொடி’ என அழைக்கப்பட்டார்.

இவர் இறைவனை வர்ணித்துப் பாடிய பாடல்,

**பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா! அமரர்ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்றும்**
**இச்சுவை தவிராயன்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!**

என்று பாடல் பாடியுள்ளார். இறைவன் மேல் இவர் பாடியுள்ள திருப்பள்ளியெழுச்சியானது மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியைப் போல, சுவையும், நயமும், அழகும் உடையன எனலாம். ஆடிப்பாடி அரங்காவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி என்று இவரைப் பாடிப்புகழ்ந்தவர் குலசேகராழ்வார்.

ISBN : 978-

## திருமங்கையாழ்வார்

நீலன் என்னும் படைத்தலைவனின் மகனாவார். இவர் பிறருக்குக் காலன் போன்று இருந்ததால் பரகாலன் எனப்பட்டார். திருமங்கைப் பகுதியின் குறுநில மன்னனாக இருந்ததால் திருமங்கை மன்னன் எனப் பெயர் பெற்றார். குமுதவல்லி என்னும் வைணவப் பெண்ணை மணந்து கொண்டு அவரது விருப்பப்படியே தினமும் வைணவ அடியார்க்கு உண படைக்க ஒப்புக் கொண்டார். ஒரு சமயம் மன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பணத்தையும் இறைப் பணமாக எண்ணிச் செலவிட்டார். இதனால் சிறைப்பட்டார். இவர் நாகை பௌத்த விகாரங்களைக் கொள்ளையடித்து திருவரங்கத்தின் மூன்றாம் மதிலைக் கட்டி முடித்தார். நாராயணா எனும் நாமத்தின் சிறப்பினை உணர்ந்து அவர் பாடிய பாசுரம்.

**தாயினும் ஆயின செய்யும்**
**நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்**

## நம்மாழ்வார்

ஆழ்வார்களில் தலைமை சான்றவர் இவரை உடலாகவும் (அவையவி) ஏனையோரை உறுப்பாகவும் (அவையம்) வைணவர்கள் கருதுகிறார்கள். பிறந்தது முதல் 16 வயது வரை பேசாதிருந்தமையால் பெருமாள் கோயில் புளியமரத்தடியில் இருந்து தவமியற்றித் திருமாலின் திருவருள் பெற்றார். வாயுவைச் சினந்தமையால் சடகோபர் என்றும், திருமாலே நம்சடகோபன் என்றழைத்தமையால் நம்மாழ்வார் என்றும் அழைக்கப்பட்டார். உண்ணும் உணவும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும், எல்லாமும் கண்ணனே என்னும் பக்தி சார்ந்தவர். இதனால் இவரை வைணவத்து மாணிக்கவாசகர் என்று அழைக்கப்படுகிறார். இதுமட்டுமல்லாமல் இவரை வேதம் தமிழ் செய்த மாறன் என்றும், இவரது திருவாய்மொழியை திராவிட வேதம் என்றும் சிறப்பிப்பர்.

**உண்ணும் சோறும் பருகும் நீரும்**
**தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்**

என்று பாசுரம் பாடியுள்ளார்.

இவர் பாடிய நான்கு நூல்கள் நான்கு வேதத்திற்கு சமமாக வைத்துப் போற்றுகிறார்கள்.

1. திருவிருத்தம் - ரிக் வேதம்
2. திருவாசிரியம் - யசூர் வேதம்
3. திருவாய்மொழி - சாம வேதம்
4. பெரிய திருவந்தாதி - அதர்வண வேதம்

## மதுரகவியாழ்வார்

ஊர்பாண்டி நாட்டுத் திருக்கோளுர். இவர் வடநாட்டில் பயணம் மேற்கொண்டிருந்த போது ஓர் ஒளிப்பிழப்பு இவரை வழி நடத்தி வந்த நம்மாழ்வாரிடம் கொண்டு வந்து சேர்த்தது. நம்மாழ்வாரை மட்டுமே ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டவர்.

வைணவம் வலியுறுத்தும் குருபக்தியின் சிறப்பு மதுரகவியாழ்வாரிடம் மண்டிக்கிடக்கிறது. நம்மாழ்வாரின் பாடல்கள் அனைத்தையும் எழுத்தெண்ணி தம் கையாலேயே எழுதி மகிழ்ந்தவர். இவரது குருபக்தியை,

**கண்டு கொண்டு என்னை காரிமாறப் பிரான்**
**பண்டை வல்விளை மாற்றி அருளினான்**
**எண்திசையும் அறிய இயம்புகேன்**
**ஒண்த மிழச்சட கோபன் அருளையே**

என்ற பாசுரத்தின் வழி அறியலாம்.

## திருப்பாணாழ்வார்

பாணர் குடியினர் என்பதனாலேயே இவர் கோவிலுக்குள் செல்ல அனுமதி இல்லை. எனவே, காவிரிக்கரையில் நின்றவாரே இறைவனைத் தொழுதார்.

இறைவனுக்கு திருமஞ்சனமாட்ட நீர் கொண்டு செல்ல பொற்குடத்துடன் லோகசாரங்கன் எனும் அந்தணர் வந்தார். அங்கு நின்று கொண்டு இருந்த திருப்பாணாழ்வாரால் காவிரியே தீட்டுப்பட்டு விட்டது என்று அவரை அந்தணர்கள் அனைவரும் சேர்ந்து கல்லால் அடித்தனர். இதனைக் கண்ட திருமால் தன் நெற்றியிலிருந்து குருதியைக் காட்டினார். பின் லோகசாரங்கனே, பாணரைச் சுமந்து வருமாறு செய்தார்.

தன்னால் திருமாலைக் காண இயலாது என்று நினைத்தவர்க்கு இறைவனே காட்சியளித்தார். அப்போது இவர் பாடிய பாசுரம்,


**கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்டவாயன் என் உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர்கோன் அணியரங்கன் என்அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே**

என்ற இப்பாடல் அரங்கநாதர் மேல் பெண்ணொருத்தி காதல் கொண்ட பாங்கிலே அமைந்த பாசுரம் இது.

## தொகுப்புரை

இறைவனின் கல்யாண குணங்களில் ஆழங்கால்பட்ட ஆழ்வார்கள். தங்களது விருப்பத்திற்கேற்ப இறைவனை வழிபட்டவர்கள் ஆவார். நாம் ஒவ்வொருவரும் பூமியில் பெற்ற இன்பத்தினைக் காட்டிலும், இறைவனின் பாதங்களைப் பற்றி வீடுபேறு அடைவதிலே பேரின்பம் உள்ளது எனலாம். இப்படியாக திருமாலின் பெருமைகள், சிறப்புகள் இவை அனைத்தும் முல்லைக்கலி, மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல் போன்ற நூல்களிலும் காணலாம். அவசர உலகில் வாழும் நாம் இறைவனின் சிறப்புகளை உணர்ந்து மன அமைதியும், முழுமையான வாழ்வையும் வாழ என்றும், எச்சமயமும் இறைவனின் திருநாமத்தை உச்சரித்து பயன்பெற்று, பிறரையும் பயன் பெறச் செய்ய வேண்டும். உலகம் சிறக்க இறைவனைத் தொழுது வணங்குவோம்.

XXX



ISBN 978-93-87882-47-8

டுடே பதிப்பகம்

192, பெல்ஸ்சாலை, சேப்பாக்கம்
சென்னை-5